# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.246/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பெரியசாமி | த–பெ | குருந்தையா |
| ஊர்: | : | கல்லமனக்குடி | சமயம்: | |
| வயது: | : | 55/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025**

**1ம் எதிரி ஆஜர்.2ம் எதிரி ஆஜர் இல்லை.மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கல்லமனக்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது அல்ல.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 19.09.2014 அன்று காலை 9.00 மணிக்கு கோட்டையூருக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது குற்றப்பிரிவு போலீசார் வாகன தனிக்கையில் இருந்ததாகவும், அந்த வழியாக சம்பவ நேரத்தில் TN63AY4267 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த இந்த வழக்கின் 2 எதிரிகளை பிடித்து விசாரணை செய்த பொழுது 02.02.2014 அன்று மதியம் 1.30 மணிக்கு காரைக்குடி லெட்சுமி நகர் குடோன் அருகே தனியாக இருசக்கர வாகனத்தில் சென்ற பெண்ணை பின் தொடர்ந்து அவரை வழிமறித்து கழுத்தில் கிடந்த செயினை அறுத்ததாகவும் அந்த நேரத்தில் ஆட்கள் வந்ததால் அவருடைய காதில் அனிந்திருந்த தோடை பறித்து சென்றதாகவும், மேலும் அதனை தன்னுடைய வீட்டில் வைத்திருந்ததாக சொன்னதன் அடிப்படையில் அங்கு சென்று போலீசார் மதியம் 12.45 மணிக்கு அவருடைய வீட்டில் 3 கிராம் எடையுள்ள தங்க தோடு ஒன்றை சாட்சிகளாகிய தங்கள் முன்னிலையில் கைப்பற்றிவிட்டு தற்பொழுது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.10 14:14:32 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி